# ஜனவரி – 03 – புதன்

### இயேசுவின் பரிசுத்த திருநாமம்

### “ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவங்களை போக்குபவர்’’ ( யோவா.1:29)

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் : 1 யோவான் 2 : 29 – 3: 1 – 6

என் அன்பார்ந்தவர்களே, நேர்மையாளரென நீங்கள் அறிந்து கொண்டால், நேர்மையாகச் செயல்படுவோர் அனைவரும் அவரிட மிருந்து பிறந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்வீர்கள். நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளா ததால்தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை. என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப் போல் இருப்போம் ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம். அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும். பாவம் செய்யும் அனைவரும் சட்டத்தை மீறுகின்றனர். சட்டத்தை மீறுவதே பாவம். பாவங்களை நீக்கவே அவர் தோன்றினார் என்பது உங்களுக்குத் தெரியும். அவரிடம் பாவம் இல்லை. அவரோடு இணைந்திருக்கும் எவரும் பாவம் செய்வதில்லை. பாவம் செய்பவர் எவரும் அவரைக் கண்டதுமில்லை, அறிந்ததுமில்லை.

**பதில்பாடல்:** மாந்தர் அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

## நற்செய்தி : யோவான் 1 : 29 - 34

அக்காலத்தில் இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட யோவான், ”இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். எனக்குப்பின் வரும் இவர் என்னைவிட முன்னிடம் பெற்றவர் ஏனெனில் எனக்கு முன்பே இருந்தார் என்று நான் இவரைப்பற்றியே சொன்னேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களுக்கு இவரை வெளிப்படுத்தும் பொருட்டே நான் வந்துள்ளேன் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தும் வருகிறேன்” என்றார். தொடர்ந்து யோவான் சான்றாகக் கூறியது ”தூய ஆவி புறாவைப்போல வானிலிருந்து இறங்கி இவர் மீது இருந்ததைக் கண்டேன். இவர் யாரென்று எனக்கும் தெரியாதிருந்தது. ஆனால் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கும்படி என்னை அனுப்பியவர் ”தூய ஆவி இறங்கி யார்மீது இருப்பதைக் காண்பீரோ அவரே தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பவர்” என்று என்னிடம் சொல்லியிருந்தார். நானும் கண்டேன் இவரே இறைமகன் எனச் சான்றும் கூறிவருகிறேன்.”

**தியானம்:** கடவுளின் மக்கள் என்று அழைக்கப்பட நாம் எத்துணை பேறுபெற்றவர்கள். படைக்கப்பட்ட அனைவரும் இயேசுவின் பிள்ளைகளே, ஆனாலும் கடவுளைத் தந்தையென அழைத்து அவரோடுகூட நெருக்கமான அன்புறவுக்குள் வாழ்பவர்களே அவரது சுவீகாரப் பிள்ளைகள். ஏனென்றால் அவரோடு இணைந்திருக்கும் எவரும் பாவம் செய்வதில்லை என்றும் “சட்டத்தை மீறுவதே பாவம்’’ என்றும் எடுத்துரைக்கின்றது இன்றைய முதல் வாசகம். நற்செய்தி வாசகத்தில் இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி இவரே உலகின் பாவத்தை போக்குபவர் என்று யோவான் அறிக்கையிடுகின்றார். இயேசு நம் ஒவ்வொருவரின் பாவத்தையும் தம்மேல் சுமந்து சிலுவையில் பலியானார். எனவே நாம் அனைவரும் அவரின் இரத்தத்தால் தூய்மையடைந்தோம், அவர் சிவையில் நம்மேல் கொண்டுள்ள அன்பினால் நம் அனைவரையும் அணைத்துக் கொண்டார். அவரது அன்பிற்கெதிராய் செயல்படுவதே அவர் சட்டதை மீறுகின்ற பாவம். எனவே பாவத்தால் இணைந்திருப்போரை தன்னோடு இணைத்க்கொள்ளவே இயேசு வந்தார். அவரோடு இணைத்திருக்க வேண்டும் என்பதே நமக்கு விடுக்கப்படும் அழைப்பு, எனவேதான் நமது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் அவரது அன்பினை பிரதிபலிப்போம். இயேசுவின் மதிப்பீடுகளுக்கு முதலிடம் கொடுத்த அவருக்கு சாட்சிகளாக வாழ்வதே அவரோடு இணைந்திருப்பதன் அர்த்தமாகும்.